49

பிஸ்மில்லாஹி.

கீர்த்தன மாலிகை.

இஃது
பிதாயதுல், கிதாபா, வெனும்
நேர்வழியின் ஆரம்பம்
முதலிய நூற்களின்
ஆசிரியரும்,
மதுரைத் தமிழ்ச் சங்கவித்வானுமாகிய கீழக்கரை.

ஸ்ரீமாந்-ஹாபிலு, செ. மு. செய்யிது முகம்மது
ஆலிம்புலவரவர்களால்

இயற்றப்பட்டு

சென்னை :
எஸ். மூர்த்தி அண்டு கம்பெனியில்
பதிப்பிக்கப்பட்டது

மூன்றும் பதிப்பு.
ஹிஜ்ரி 1335-ரபீஉல் ஆகிர்-பிறை30குச் சரியான
கி. பி. 23-2-17 வெள்ளிக்கிழமை.

இதின் விலை.] காப்பிரைட் [அணா 3.

...ற்றுக்கணக்கிலானால் பிரத்தியேகமாய்ப்பேசி
முடித்துக்கொள்ளப்படும்.

4
Q7:417
N7

புதிதாய் வெளியிடப்பட்ட இந்தப் புத்தகமானது, கீழக்கரை ஸ்ரீமாந் செ. மு. செய்யிது முகம்மது ஆலிம்புலவரவர்களாலியற்றப் பட்டது. இதில் அல்லாகுத ஆலா பேரிலும் றசூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லமர்கள் மீதிலும், சாபிஹீ இமாம் அவர்கள் மீதிலும், முஹ்யித்தீன் றலியல்லாகு அன்கு அவர்கள் மீதிலும், கீழக்கரை, கல்வத்து, செய்யிது அப்துல் காதிறு வொலியுல்லா அவர்கள் மீதிலும், அல் ஆரிபுபில்லா, கொழும்பு செய்யிது முகம்மது ஆலிம்சாகிபு அவர்கள் மீதிலும், இயற்றப்பட்ட கீர்த்தனைகள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கீர்த்தனையும், பக்திரசம் பயப்பதாகவும், பாவமானவழியை விட்டு மனந்திருப்பிப் பரமானந்தமான வழியை இச்சிக்கும்படித் தூண்டிவிடுவதாகவு மிருப்பதால், இந்தப் புத்தகத்தை இருதைய விசுவாசத்துடனே வாசிப்பவர்களுக்கு நன்மையே விளையுமென்பது நிச்சயம்.

கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை மிகவும் சகாயம், அணா. 3.

நூற்றுக்கணக்கில் வாங்கிக்கொள்வதானால் பிரத்தியேகமாய் விலை பேசிக்கொள்ளப்படும்.

முகுதஸருல் ஈமான், வனஸீஹதுல் இஸ்லாம்.

மிகவும் பிரயோஜனமுடைய இந்தச் சிறிய அறபு தமிழ் கிதாபானது; அதிராம் பட்டணம் கொ. செய்கு அப்துல் காதிறு ஆலிம் சாகிபு அவர்களாலியற்றப்பட்ட கிதாபுகளிலொன்று. இதில் இஸ்லாமார்க்கத்தினுடைய ஹுக்குங்களைச் "சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" என்னும் அழகு பற்றி, வாசிப்பவர்களுடைய மனதில் ஆழமாய்ப்பதியும்படி மிகவுந் தெளிவாய்விளக்கிக்காட்டப்பட்டிருப்பதோடு, இருதையம் பரிசுத்தமாவதற்குரிய அநேக நல்லுபதேசங்களும் அடங்கியிருக்கின்றன. விலை அணா 2.

முனஜாதுல் அஸ்னா, மஅ, தர்ஜுமதி, அஸ்மா இல்ஹுஸ்னா

இதில் அல்லாகுத ஆலாவுக்குச் சரியான ஹதீதுகளின்படி தரிபடுத்தப்பட்ட அஸ்மா உல் ஹுஸ்னா வெனும் 99 திருநாமங்களையும் தப்சீர்களில் எழுதப்பட்ட முறைப்படி அறபு (லப்லு) களை முறையாகவைத்தும், அது அதற்குரிய தமிழ் தர்ஜுமாக்களையவைகளுக்கு மத்தியிற் சேர்த்தும் பாடப்பட்ட முனஜாத்து 1-ம் அலிபு முதல், யே, வரையிலுமுள்ள 29 எழுத்துக்களையு முறையே துவக்கங்களில்வைத்துப்பாடப்பட்ட முனஜாத்து 1-ம் அடங்கியிருக்கின்றன. இதையிருதைய விசுவாசத்துடனே ஓதுகிறவர்கள் அல்லாகுத ஆலாவிடத்தில தங்களுடைய ஹாஜத்துக்களைப் பரிபூரணமாய் நிறைவேறப் பெற்றுக்கொள்வதோடு, அஸ்மாஉல் ஹுஸ்னாவுடைய தமிழ் அர்த்தங்களையும் விளங்கிக்கொள்வார்கள். இது கீழக்கரை செ. மு. செய்யிது முகம்மது ஆலிம்புலவர் அவர்களா லியற்றப்பட்டது. அறபு தமிழ் எழுத்தா லச்சிடப்பட்டிருக்கின்றது. மிகவும் சகாயம் விலை அணா. ஒன்று தான் 0 1 0.

பிஸ்மில்லாஹி.

கீர்த்தனை மாலிகை.

தற்சிறப்புப்பாயிரம்.

கட்டளைக்கலித்துறை.

பூவா ருலகும் புனைக்கும்வல் லோனைப் புகழ்ந்துநின்று
மரவா ருயர்சல வாத்தால் முகம்மதை வாழ்த்தியபின்
நாவா ருயர்தரக் கீர்த்தனை மாலிகை நன்கியம்பப்
பாவா ரரும்பதந் தேராத நெஞ்சம் பதைக்கின்றதே.

நபிஸல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்கண்மீது

S. கட்டளைக்கலித்துறை.

சங்கதி மேவு மதினு வளர்தரு வேசதுவே
தங்க மருவிய வுத்தம ரேசக லாகமமே
பொங்கிய நற்கதிர் பொற்ருள் கமலமுற் றீர்நபிகள
வங்கிச நாயக மேகபீ பான முஹம்மதுவே.

S. பதம் பல்லவி.

தருணத்திலென்முன் வந்து காப்பேனெனும்வலக்கை
தருவதுகடனுமே-யெனும்வலக்கை
தருவது திடனுமே

அநுபல்லவி

ஒருமுத்தி லுதித்திந்த வுலகமற்று மெவையும்
உலகமற் றுமெவையும்
ஒக்க வொளிவாய்நின்ற-டக்க மகுமூதரே (தரு)

S இவ்வடையாளமிட்ட செய்யுட்களெல்லாம் இந்நூலாசிரியரின் முன்னோரிய மகாவித்வான் கருத்த சதக்கு தம்பிப் புலவரவர்களா லியற்றப்பட்டன.

சரணம்

வாயு நாவும் வரண்டு மனமெல்லாமெலிந்திட
மனுமுறையுள்ளோர்கண்ணீர் மழையெனச்சொரிந்திட
சேயுந்துணைவர்களுஞ் செல்வமும்பிரிந்திட
செய்தபழிபாதகச் செயல்பலதெரிந்திட
சிலிர்க்க வுடனரம்பு—வலிக்க மனதுவெகு
கலக்கமுற விறைவன்—மலக்குல் மவுத்துவருந் (தரு)
விழியிரண்டுஞ்சிவந்து வெகுகோப மாயடுத்து
மேனுள கன்ற வுயிர் மறுத்துடலில்விடுத்து
மொழியுமொழிக்குமறு மொழிகொடென்றேதடுத்து
முனிந்து சுக்குமாரென்னு மூரிட்த்தண்டமெடுத்து
முப்புவி யுங்குலுங்க-செப்பிய முன்கர்நகீர்
வெப்பமுடன்வெகுண்ட-டிப்பவடர்ந்துவருந் (தரு)
மிகுதி நாளில்மஹ-ஷர் வெளியிற் பொழுது தாக்கி
வேகாமன் முன்செய்பாவ வினைத்தொட ரெல்லாம்நீக்கி
நியதி தராசினன்மைத் தட்டினி ரம்பத்தூக்கி
ரட்சித்தல் ஹம்துக்கொடி நீழல்த னிலுமாக்கி
நீலக்க ரியரோமக்-காலுக்கு நேர்மையான
வேலில்கூர் மைமுஸ்தகீம்-பாலத்தி டைநடக்குர் (தரு)
மருமலர்ச் சோலை சூழு மதின நகரின்வாழ்வே
மாதவரப்பதுல்லாகண் மகவென்றுதித்தகோவே
தருமசற் குணமேரே சகலோர்க்குங் கற்பகாவே
சதுமறை யோர்புகழும் செய்யிதகுமதுவே
தன்னந்த! னியேனின்று-அன்னம் பாறுகின்ற
சின்னஞ் சிறியேன்சதக்-கென்னும் பயலுக்கிந்தத் (தரு)

பல்லவி.

இன்னும் ஏனே வரக்காணேன் என்னசெய் குவேன் (இன்)

அநுபல்லவி.

நன்னயம் வளரநபி நாதர் மகுமூ தரே (இன்)

சரணங்கள்

கண்ணிரண்டுங்கண்டு களிக்க மையல்
கொண்டாநந்தக்கடல் குளிக்க

பண்டுநாளிற்செய்த பாவமீறப் பார்க்க துயர்தீர்க்கவே . (இன்)
துன்ப மகன்றகன் றோட மனத்
தின்ப மிகுந்துகொண் டாட
தொண்டரிலெழியேன் சிரசிற்பாதஞ் சூட புகழ் பாடவே (இன்)
மக்கவாழப் துல்லா புத்திரர் உயர்
சொர்க்கம்வாழுகவ சித்திரர்
மிக்கசதக்குதம்பிக்கருள்செய் வேதர் நவநீ தரே (இன்)

S பல்லவி.

மீறுதாகந்தமோக விரகம் (இது)
வேளைநல்குவீரனுக் ரேகம்

அநுபல்லவி.

மாறில்லாதவல்லவன் றூதே மக்க
மகுமூதுபதத்துணை மீதே வராதிப்போதே (மீறு)

சரணங்கள்.

பாவங்கோடான கோடி கோடி செய்தேன்
பரிகரித்தேனே வாடிவாடி
தேவரீருமைத் தேடித்தேடி யுங்கள்
செம்பொற்ப தத்தைநாடிநாடிப்பாடிக்கொண்டாடி (மீறு)
வெவ்வினைத்தொடர்பவந்தீர்த்து நெஞ்சில்
வெளிச்சமுண்டாக்கியெனைக்காத்து
பூவியனெறிமுறையிற்சேர்த்து வரும்
புயபதி வழிபார்த்துப்பார்த்துப்பார்த்துக்கண்பூத்து (மீறு)
ஆதிவல்லவன்றிருத் தூதே மக்கத்
தப்துல்லா தருமகு மூதே
சோதிநபிபொற்பாதபோதே நம்பித்
துதிக்கும்சதக்குத்தம்பி மீதேவராதிப்போதே (மீறு)

S பல்லவி

அஞ்சாதேநெஞ்சேயவர் செஞ்சர ணந்தஞ்சமே

அநுபல்லவி.

மஞ்சார்குடையிறசூல் வள்ளலுண்டுநீயொன்றுக்கும்(அஞ்)

சரணங்கள்.

வராத மேன்மைவர வரப்பிரசா தங்கொடுப்பார்
தராதர மறிந்து தங்கைதாங்கியே யெடுப்பார் (அஞ்)
எந்நாளு நம்புதலாய் இருப்பதின லேதிரிவாய்
ஒன்னார்த மக்குமனம் உறுதிகொண்டருள்புரிவார் (அஞ்)
தூயனிறசூல்சதக்குத் தம்பிசொல்லதையுவப்பார்
காயனகர்முகம்மது காசிம்பேரிற்கருணைவைப்பார் (அஞ்)

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.
சீதமதிவதன சிங்காரமடமாது என்றவர்ணமெட்டு.

பல்லவி.

சோதிமதிவதண சுந்தரமகுமூதெங்
துரைவாரார் தெரிவாயே (சோதி)

அநுபல்லவி.

தூதர்க்க ரசரிவர் சுகிர்தபொற் பாதந்தந்தால்
சுடமரு வும்பர சுகமிகு மருள்தந்தார்
துஞ்சுமாயவினே யெஞ்சிடவவரிரு
சஞ்சப்பாதமல ரஞ்சலிசெய்திட
துதிசேரெழிலார் சுகந்தமெய்யினர்
கதிசேரொளிவார் கருதுண்மையினர் (சோதி)

சரணம்.

காதங் கமழ்ந் துவீசுமே செங்களபம்பொங்கிய (காத)
கருதல ருயிரற வொருகர மணவிடு
திருமறை பகரிறை யருள்பரி மளமொரு (காத)
கணித்த பொறிகளைத் துணித்து மறைநெறி
பணித்து வுயரிறை யணித்து மிகுநலம்
கண்டமாதவர்கள் கொண்ட மகிழ்வின்புகழ்
தொண்டு பூண்டிடும் சுயபரி மளமொரு
காதங்கமழ்ந்துவீசுமே செங்களபம்பொங்கிய (காத)
காதங் கமழ்ந் துவீசுமே சோதி
காணக் கண்களுநங்கூசுமே யவர்

பாத மிதத்தைநேசமே செய்து
பண்ணும் பவத்தைநாசமே
காலுமுடலினிழல் காணுமோ காணாது
காலமுழுதும்பதக் கான்மலர் தோயாது
கருது நமக்கிசைந்த வரத ரவர்புகழைப்
பருகிப் பருகிமகிழ் மருவி மருவிநிதம்
பாடிப்பாடிப்பவ மருளதைவேரறுத்துத்
தேடித்தேடிக்களை தியக்கமதைமறுத்து
கனவிற் றுணிவாய் நினைவிற் கனிவாய்
வினவும் பணியை நனிசெய் யெனவே
கணித்த மறைமொழி ரசமதையருந்த
பணித்த பாசவிமோசன மிகுந்து
கந்தர முந்தியே சுந்தரமிகுந்து
வந்தசு கந்தச வுந்தர மிகந்தோர்
காருலவு நாயகரின் பேருலவு தாசனெனும்
சீர்புகழ் செய்யிதுமு கம்மதின் விச்சித்ரச் (சோதி)

தருவார்பதமே என்ற. லாவணி—வர்ணமெட்டு.

பல்லவி.

வருவாரிற சூல்வளர் தாண்மணியே
வரமேவனமே சிரமீதணியே

அநுபல்லவி.

பெருமானபீமா ருக்குமிக்க பேர்தருஞ்செங் கோலர்
பெலந்தாங்குமப்துல் லாவளிக்கின் பம்பயக்கும் பாலர்
பிறழாதவுண்மை நூலர்
பின்னுளுமது கூலர் என்
பீடைதள்ளும் பண்புஞ்சாருன் முன்-முன்-முன்-முன்-முன் (வரு)

சரணங்கள்.

பதிமேற் பதி யாப் பதமாதவரே
பரியா டர வோடுரை சாதவரே
துதிசே ரது ஞன்கிளைத்தூ தவரே
துகளே தனு காவுட லாதவரே

மதியா துயர்மா ணிக்கமக்க மாமதினைவாசர்
மகிழ்நீங்குமன்பில் லாரகத்தும் பண்புகுத்துந்தாசர்
மறவா தவுப தேசர் மாயாதொளிர்செய் தேசர்
மனமேவு துன்பம் பம்புந்தன்ப-மன்-மன்-மன்-மன்-மன் (வரு)
கனகாம் பத மார்கபு ஸோடமர்ந்தோர்
ஹலரத் திறை யோடுரை யேபகர்ந்தோர்
மனமே விடு மும்மல மேதவிர்ந்தோர்
மதுவார் நனை மாலிகை யேபுனைந்தோர்
வனவேட்டுவன்பின் கூட்டிலுற்ற மான்பிணைநின் றுதர்
வனமோங்குமிந்தி ராய்வகுத்துப் பின்பொருத்துந் தாதர்
மருவார் தரும்பொற் றேகர்
மதியானனத்தின் வாகர்
வனமாண்புதங்கும்புங்கம்பொங்குன்-கண்-கண்-கண்-கண்-கண் (வரு)
ககனர் தரு நேர்கரு ணைகரரே
கருதார்க் கருள் சேர்குண சாகரரே
பகமார் தரு நேர்கிரு பாகரரே
பரன்மீ தரு நீர்தரு மாகரரே
திகழார்தருஞ்சன் மார்க்கநெறி சேயசெம க்கூட்ட
தினமேவுசெய்யிது முகம்மது செய்பவத்தை யோட்ட
சிறந்தோங்கும்வழி காட்ட சிரமீதுபதஞ் சூட்ட
திசையெங்கும்விண்புகழ்தங்குந்தாயக-மன்-மன்-மன்-மன்-மன் (வரு)

இராகம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஞானஸ்தானம் யானேசேர
கோனென்மாமகு முதேயுந் திருமலரடி (ஞான)

அநுபல்லவி.

நவமார்மஞ்ஞை யானரூபா
நாயக பதியேமிகு கவிஞர்தரு நிதியேதினம் (ஞான)
வானஸ்தானந் தானேசேருந்
தீனின் மாமணிநர்தாமன் தெரிசனமுற (வான)

வனமாரிந்து வதனபூபா
மதினுகக ரதிபாவிது தகிகான்மறை துதிபாதினம் (ஞான)

ஈனஸ்தானங் தானேதீர
மானின்மாபிணை நீ தாவென் னநுதினமன (ஈன)

இதமார்கஞ்சப் பதமேதோயா
விறைநாயக னருளேசது மறைநாயகப் பொருளேதினம் (ஞான)

சேனைதானேகானேயேக
தேனினீரமைத் தாதாவுந் திருவரமுறுஞ் (சேனை)

செய்யிதுமு கம்மதுதஞ்
சிரமீதணி பதரேமழைக் கரபாமுகம் மதரேதினம் (ஞான)

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

மரத்தடியிலிருந்தமங்கை-யென்றவர்ணமெட்டு.

பல்லவி.

மரத்தடியில் விழுந்து மன்னமகு மூதைக்காணேன் (மர)

அநுபல்லவி.

மாயாப்ர பஞ்சமென்னை மயக்கவேயிக் கோலமானேன் (மர)

சரணங்கள்.

மன்னவரை மறந்தேனே மதிமோச மாய்ப்போனேனே
முன்னவன் றிருத்தூதான அண்ணலகு மதைக்கண்டு (மர)

பஞ்சபாத கனுனேனே நெஞ்முரு கலானேனே
வஞ்சியர்புகுத்திவைத்தநஞ்சைத்தொகுத் தோரைக்கண்டு(மர)
கானகத்து மானைப்போலே கலங்கலா னேனேமாலே
வானகத் தமரர்மேலே வருமிற சூலைக்கண்டு (மர)

செய்வினை தெரிந்திலேனே தீவினைபு ரிந்தேனுனே
செய்யிதுமு கம்மதுவின் ஜெயவகுமதைக்கண்டு (மர)

இராகம்-சாமா-தாளம்-ரூபகம்.
ஸ்ரீராமச்சந்திரனே-யென்றவர்ணமெட்டு.

பல்லவி.

சீர்வானச் சந்திரனேர் சீர்யோகச் சுந்திரரே
சீர்மன்ன ரானவிற-சூல்-சூல்-சூல்

அநுபல்லவி.

சேடி யேபுகழ்-பாடியே
சேர்பாத கஞ்சமலர் தார்மீது தஞ்சமென
வேர்பாவந் துஞ்சுமிற-சூல்-சூல்-சூல் (சீர்)

சரணங்கள்.

காதங் கமழ்மகு-மூதராம்
காமாகிதந்தெறவே-நேமாவி தம்பெறவே
சேமாவி தந்தவிற-சூல்-சூல்-சூல் (சீர்)

பாத மவனிப-டாதமான்
பாவாண ருந்துபுகழ் நாவார வந்தபுகழ்
தேவாரவிந்தவிற-சூல்-சூல்-சூல்

மீட்டும்பவத்துய-ரோட்டியே
மெய்யறிவி லாத்துவித செய்யிதுமு கம்மதுவை
உய்யுமருள் செய்யுமிற-சூல்-சூல்-சூல்

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்.
அள்ளியள்ளிக்குடிக்கும் என்றவர்ணமெட்டு.

கண்ணிகள்.

அள்ளியள்ளிக் கொடுக்கும் வள்ளணீர்வாருமே
ஆநந்த வாரிசேருமே-கண்பாருமே-ஆனந்தவாரி
சேருமே இறை
ஆசைக்கிசைந்த நேசகம்பீர
ராசருவர்விசு வாசமுகம்மதே (அள்ளி)

காமருவுங்களப மான்மதவாசமே-காதங்
கமழ்ந்துவிசுமே-வுல்லாசமே காதங்கமழ்ந்துவிசுமே-பிர
காச மிகுமயில் வேசர் சமபூசித
போசரகுமதே நேசமனதுற (அள்ளி)

தஞ்சந்தஞ்சம்பெருகுங் கஞ்சமென்பாதரே-சம்பன்ன
ஞானநாதரே-மெய்வேதரே சம்பன்னஞானநாதரே-பிர
சாதமிகுமிறைத் தூதருயிர்களின்
தாதர்மகிழ்நவ நீதரனுதினம் (அள்ளி)

அருணனுரைபகருங் கிரணசையோகரே-அற்புத
மானவாகரே-பொற்றேகரே- அற்புதமானவாகரே-எனக்
காருங்கதியில்லை நீரேகிதமருள்
விரென்றுமதுதாள் சேரமகிழ்வொடு (அள்ளி)

மஞ்சுங்குடைகவிழு மஞ்சுகராசரே-மாமதின
வாசரே-சந்தோசரே-மாமதினவாசரே-இந்த
வையகமுற்று மெய்யறிவற்ற
செய்யிதுமுகம்ம துய்யும்வழிபெற (அள்ளி)

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

நானேயகுதி-யென்றவர்ணமெட்டு.

பல்லவி.

மானேசொல்லடி வாது
செய்யாது சகி (மானே)

அநுபல்லவி.

மானே மதினநகர்க் கோனே வருணப்பதந் தானே
மருவிடவந்தேனே மனமதுநொந் தேனே மகிழ்செந்தேனே(மானே)

சரணங்கள்.

நானே நபிகள்பெரு மானேநகும்பிரபை யோனே
நறைகமழ்சீ மானே நயம்பெறவந் தேனே நயந்து[illegible] (மானே)

பாக்யம்பகருமறை வாக்யம்பரவியச லாக்யம்பவிஷளிப்பிருக்கும்
யோக்யம்பவவினையைப் போக்ய நபியைநோக்கி (மானே)

பையன் மனதுமிக நையும்பவத் துயரி னுய்யும்பரமனருட்
செய்யபனுவலுரை செப்பித் முகம்மதுய்ய (மானே)

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பூரணச்சந்திரவிம்பம்போல்-என்றமெட்டு-

பல்லவி.

பூரணச்சந்திர விம்பமே-மகுமூதரின்
பூம்பத மது தன்பமே

அநுபல்லவி—சரணங்கள்.

காரணக்கடலிவர் கான்மலரைவர்ணிக்கக்
கருதும்பெரியோரேநீர் பொருதும்பவந்துணிக்க
கந்தர-முந்திரு-வுந்தெற-வந்தசு கந்தர
விந்தச-வுந்திர-வந்தரகதிக்கும்
நவநிதிக்கு மிகவுயர் மதிக்குமமரவர் துதிக்குமதுநிகர்
விதிக்குமிறையவன் வகுக்கவிலையொளிர்
காந்தமுங்குண சாந்தமும்மிக
வாய்ந்திடும்படி யீந்திடவருமொரு
காவதமேவியகோவுயர்மான்மதக் காவோவலாதுயர்பூமதுவோ
காதலித்தனன் பூதலத்தினிற்கண்டு
கலங்க ளிலங்க துலங்க விழுந்து
கனிந்து புகழ்ந்து புனைந்து மகிழ்ந்து
காலமூன்றுமனு கூலமேவவவர்
சீலன்வரிசையிபு ருகீமேவுபரி (பூரண)

வானோர்பரவும்பெரு மானோர்மறைபகர வானோர்மதினகர்க்
கோனோர்மொழிமதுரத் தேனோ ரிறையருசி வானோர் வனம்பரவு
மானோர் தனக்குப்பிணை யானோர்—எவர்க்குமருள்
பாக்யம்பரமனருள் வாக்யம் பரகதிசலாக்யம் அருள்சுரந்து
வஞ்சக்குபிரவர்தந் நெஞ்சக்கவரொழிய
விஞ்சைக் கதிர்மறையை மிஞ்சவிளைத்தவர்
மங்[illegible]விகை வாரணராம்-உயர்
திங்க[illegible]வகுகாரணராம்-பிர
சங்கரெங்களிறையாரணராம்-மிகு
சங்கைதங்குபரி பூரணராம்-கரு
வண்டு மதுரரச முண்டு சுகிர்தவிசை
விண்டு மகிழ்ந் துகுடி கொண்டமலரணியும்

பண்டு முயலரவம் விண்டமலர்ச்சரணங்
தொண்டரகத்திருத்திக் கொண்டமுகம்மதுவே
மனமது தினமிகு மயல்பர விடவரும்
மதியிலியென்முன்பா கதிதரவருகவே
மையலக லாதுபுகழ் செய்யிதுமு கம்மதுவை
உய்யுநற்கருணை மழை பெய்யமிக வருள்பரி (பூரண)

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

ஏனோவென்மேல் பழிசுமத்துறீர் என்றமெட்டு.

பல்லவி.

மானேயென்மேல் மறுதலிக்கிறாய்-சகிமானே

அநுபல்லவி.

வாதென்னகோதையே வாதென்னகோதையே
வரதாகம மாமகுமூத ரிடஞ்செல (மானே)

சரணங்கள்

மலர்தலையுலகமெல் வாம்புகழ்தருமவர் மலரடிபரவிடயானே
மனமதுமகிழ்ந்தநு தினமினிதுரைக்கினும்வழுத்திடுவகை [தெரியேனே
மாறும்மேயென்பாவம்-மாறும்மேயென்பாவம்
வருந்திடநின்று பெருந்துயரோதிட (மானே)

திருபரவியவமரவர்க்கதிபதியெனும் ஜிபுரயீல்தடவரைமீதே
திறனுறுமிறையவனருண்மறைவழுத்திடுஞ் சிரமருசுயர்திருத்தூதே
தீரும்மேமுன்தாபம்-தீரும்மேமுன்தாபம்
ஜெயந்தரவந்த சுயம்பிரகாசரா (மானே)

திசைமலியசலமெல்லாந்தவிர்த்திடுமுயர் திருபுஜபலமிகுதீரர்
தினந்தினமனமதுபவந்தனிலுழன்றிடுஞ் சிறியனின்பெருவினைதீர
சேரும்மேமுன்லாபம்—சேரும்மே முன்லாபம்
திருந்திடவந்த பொருந்தியசுந்தர (மானே)

கவருறுங்குபிரவரி ரிதரவொருபிடி கரமணலிடுந்திடவீரர்
கதியுதவியதிருமதினமன்னகர்க்கதி பதியெனுமதிகவுதாரர்
கஞ்சம்மேவும்பாதர்-கஞ்சம்மேவும் பாதர்
கவன்றிடுசெய்யிது முகம்மதினருள்பெற (மானே)

இராகம்-செஞ்சுருட்டு-தாளம்-ரூபகம்.
கண்ணேயென்னசெய்வனடா என்றமெட்டு.

பல்லவி.

கண்ணேயென்ன செய்குவே னன்பர கதியே-சதிர்மதியே

அநுபல்லவி.

கந்தரமேறிய செந்திருப்பாதசு
தந்தரமாகவே தந்தருட் செய்யுமென் (கண்)

சரணங்கள்.

விண்ணோர்சென்னி மேவிய தாமரைப் பாதா-ஜக நாதா
விற்பனமாதவ முற்பவமேயுயர்
அற்புதமாகிய கற்பகமேயென்றன் (கண்)

முன்னோர்சொன்ன மூதுரைமாமகு மூதா-சது வேதா
பன்னகப்பூம்பொழில் துன்னியமாமக்க
மன்னவராமெனும் அண்ணல் முகம்மதென் (கண்)

காரார்குடை யார் தரும்பேருபகாரா-மகா நேரா
கத்தரெனும்பரி சுத்தநிராதர
முத்தனருள்பிர சித்தமுகம்மதென் (கண்)

மையார்கன்னி மாகதிஜாகொளு மதனா-மதி வதனா
செய்யபுகழுரை மெய்யறிவெய்தவே
நையும்வினையற செய்யித்முகம்மதென் (கண்)

இராகம்-காம்போதி-த்ாளம்-ஆதி.

உற்றதென்ன சொல்லம்மா என்றமெட்டு.

பல்லவி.

உற்றதெல்லாஞ்செல்லம்மா- அம்மாவெனக்
குற்றதெல்லாஞ்சொல்லம்மா

அநுபல்லவி.

பெற்றதாய்தமர்செல்வம் பிறந்தவராலும் பேறெனக்கென்னலாபம்
பற்றலர்பரவிய பதமரைமகுமூதர் பாலினிலினிதேகி
யவர்-பாலினி லினிதேகி-யெனக் (குற்ற)

சரணங்கள்.

திராதமும்மலவாரியிற்புகுந்தே திசைக்கின்றதென்னாவி
காரிடங்கவிகையர்காத்திமுலன்பியா காரணரிடத்தேகி
யுயர் காரணரிடத்தேகி யெனக் (குற்ற)

காதநறைகுலவுங் கருணையம்பெருமான்காதிமுகம்மதுவின்
ஆதபந்தனைத்தவிர் பாதபங்கயந்தர அந்தணரிடத்தேகி
மிக வந்தணரிடத்தேகி-யெனக் (குற்ற)
கோதில்கம்பீரர் குபிரர்விரோதர் கொடுவரிமுயல்பகர்ந்தோர்
தீதகன்செய்யிதுமு கம்மதின் பவத்தொடர்திக்கெல்லாம்
பறந்தோட பல திக்கெல்லாம்பறந்தோட-எனக் (குற்ற)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஞ்தி.

மானிலமுழுவதும் அரசுயான்புரிந்து என்றமெட்டு.

கண்ணிகள்.

மானிலமுழுவதும் பரவியசீர்த்தி வளர்திகழ்மகுமூதா
மதிக்குமமரவர்தஞ் சிரத்திற்பதிக்கும்பத வாரிசமருணதா (மானி)
மானினம்பரியுடும் பாதியரவினொடு வழுத்திடுந்திருநாவா
மரிக்குஞ் சிறுவரெழுந் திருக்கக் கருணைசெயு மாட்சிமை
மகாதேவா (மானி)
வானிலஞ்சுடர்தரவருமதியதனை வகுத்திடுநவநீதா
வருத்தும்பவத்துயர்க ளறுத்துன்றிருவருளைப்பொருத்திடு
புகழ்வேதா (மானி)
பந்தப்பிணிவறுமையெந்தப் பொழுதுமெனைத்தொந்திப்பதறியீரா
கந்தப்பதத்திணையைவந்திப்பதற்க கத்திற்சிந்திப்பதளியீரா (மானி)
காதங்கமழுநறைமோதும் பிரபைதருங்காரணத்திருத்தூலா
கதிக்குஞ்சதுமறைகள் துதிக்குந்தகுதியுள்ளகாரிடுங்
குடைமேலா (மானி)
ஆதவன்றருகதிரகலும் பொழின்மதினத்ததிபதியெனும்பூபா
அகலிடந்தனில்வேறு புகலிடமில்லையுமதடைக்கலமதிரூபா (மானி)
கானிலம்புனல்தரும்காத்திமுலன்பியா காரணமிகுங்காதா
கருதுமெழியவனைப்பொருதும்பிணிய கற்றி க்கதியருள்
தரும்போதா (மானி)
பூதலமிசைபதியாதபதக்கமலப் போதினைப்புகல்யானே
பொருதுங்குபிரவர்கள் பெரிதுமடியமணல்புகழ்காரத்
திடுகோனே (மானி)

ஆதிமுதல்வனெடு சோதிமறைபுகல அருசிடத்தமர்கோவே
அறுத்தகரவிழிகள்பொருத்தி மறைவழியைநிறுத்திய
முஸ்தபாவே (மாநி)
நையுமுமதடிமைசெய்யித்முகம்மதுவின் நனிவினையகல்சீலா
நவிலும்புலவர்மனக்கவலை தவிர்த்திரங்குஞ்சுவன
மளிக்குமேலா (மாநி)

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

பார்க்கும்ப ார்வையிலே என்றமெட்டு.

கண்ணிகள்.

சாதுஜயமகு மூதர்சுயம்பிர காசம்
சதாவிசு வாசம் சரதமன்னேசம் - நிதந்
தஞ்சமவர்பாதக் கஞ்சமென்றேனிந்த தாசன் (சாது)
மங்குலிடுங்குடை தங்கும்பரிமள மேனி
சர்வகலைக் யானி சம்சாகர ஞானி - உயர்
மாட்சிமையாம்பதக் காட்சியொன்றேபிர தானி (சாது)
தஞ்சமென்றோர்களுக் கஞ்சலஞ்சலென்ற தாதர்
சம்பூசித நாதர் வரப்பிரசாதர் - மகிழ்
சந்ததமுந்தவ முந்தியசெந்திருப் பாதர் (சாது)
சாபங்களும்பழி பாவங்களுங்கொண்ட தாலே
புவி மேலே யினி மேலே - பரி
தாபந்தனைத்தவி ராகந்தமாமிற சூலே (சாது)
பையலென்றுந்துதி செய்யிதுமுகம்மது பாடி
பனுவலைச் சூடி பதமலர் நாடி - மிகு
பட்சமுடன்வந்தேன் ரட்சித்திடுமருள் கோடி (சாது)

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

வேதாசரணம் என்றமெட்டு.

பல்லவி.

வேதாசரணம்-வேதமகு-மூதாசரணம்

அநுபல்லவி.

வேதாதென்பரன் குன்றமதிலுரை
தீதான பந்தத்தைவிட் டாதாரமாகவரும் (வேதா)

சரணங்கள்.

சீர்வாய்ந்தநும்மகளைத்-திருமணமிறைசெய்தநிலா-வுயர்
தேவரமரர்முதல்யாவருந்துதி செயுமேலா
பார்வாய்ந்தொழுகுபுகழ்-பாவையாமினுதரும்பாலா-ஐய
பரமனுரைபகரவருமொருபெருமனுகூலா
காராருமுகிற்குடை கவிந்திடநாடி
கருதிமுடுகிவருங் கடிதினிலோடி
பேராருமமதுபொற் பாதாரந்தேடி
பிரியமுடனேவந்தேன் பெரும் புகழ் பாடியே நாதா
ஜக நாதா-நறைகுலவும் பாதா-நவிலுமிறைத் தூதா-வுமை
நம்பிப்புகலுமெனக் கின்பமுதவவரும் போதா (வேதா)
காதநறைகமழுங்-கருணையருளும்பிரகாசா-வுயர்
ககனமுழுதுமிகு மகிமைபரவுமயில் வேசா
பாதமவனிமிசை பதியாது வருமுபதேசா—உயர்
பரகதி தரவரு நரபதியெனும் விசுவாசா
ஆதவன்றருகதி ரருஞ்சுடர் மதியே
அந்தரம்புவனமெல் லாமதிபதியே
மாதவரப் துல்லா மகவெனுநிதியே
வரமருவும்பிரபை தருமுயிர் பதியான-வாசா
வுயர் வாசா-மருவுமிறைநேசா வளரும்ஜகதீசா-வுமை
வந்தித்திடுஞ் சிறியமைந்தனைக்காத்தருளுந்தேசா (வேதா)
தேர்வேந்தருங்கழலைச் சிரமிசைபரவியசீரா-பெருந்
திமிரர்குலமொருவ வமரவருவிசெய்நேரா
கார்வாய்ந் தொளிருமிரு கரதலர்பரவியவூரா-வுயர்
கத்தனிடமகிமைபெற்றிடுமதிகவுதாரா
சருவதயாபரன் றருமருள்கூட
தாரணிமீதிலுங் காரணம்பாட
வரிசையிபுருகீம் வல்வினையோட
வானவரம்பையர்கள்வளரிசைபாடவே. வாகா
திரு வாகாவணங்குமிறை யோகாவரமருவுந்தேகா-வுமை
வணங்குமடிமைமன-மிணங்கவருள்புரியுமேகா (வேதா)
மையணியுங்குழலாள்மாதுகதீஜாமணவாளா-தின
மருவும்பரமனெடுவசனித்திடுமசலத் தோளா
மெய்யணியும் பெரியோர்விரும்பவருங்கிருபையாளா-செழும்

விகசிதவிகர்தரும்மிகுசித விமலமென்றுளா
பையரவையழித்த பரமதயாளா
பணிபணிந்துரைதரப் பகருரையாளா
செய்யிதுமுகம்மதிச் சிறியனையாளா
திருபரவுங்கிரணமுறுங்குடையாளராம்-தேவா
மகா தேவா-திருமறைசொன் னவாதினம்புகழுமூவா-வுமைத்
தெரிசித்திடுங்கருணை வருசித்திடுகமுஸ்தபாவாம் (வேத)

அரவமோந்ததா என்றமெட்டு.

பல்லவி.

கவலை தீருமே-கடைக்-கண்ணுற்பாருமே

அநுபல்லவி.

திவலையேனுமுந் திருவரமருள்
அவலமேகவே யனுதினமனக் (கவலை)

சரணங்கள்.

கதிக்கபாடமே-அமரோர்-துதிக்கும்பீடமே
மதினபூபரே மகிமையோகரே
புதியரூபரே புகழும் வாகரே (கவலை)
வேதவாக்கியமே.நாதா-விமலயோக்கியமே
காதமேவிய களபவாசரே
பாதமேலிடம் பதித்தபாசரே (கவலை)
கற்பகத்தருவே- மேலோ-ருற்பவத்திருவே
ககனமேவிய சுகுணசீலரே
மகிமையோர் புகழ் மிகுந்தயாளரே (கவலை)
வேதசற்குருவே- யுயர்-மேவுநற்கருவே
செய்யவும்பதச் செழுமலரருள்
செய்யிதுமுகம் மதுவின்சிந்தையின் (கவலை)

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பிரணவசோதியென்ற மெட்டு

கண்ணிகள்.

* பிறழ்நவசோதி ஓ பிரமமேயாதீ
அரவசங்கர வரததுங்கர அணியேமணியேபணிவில்லா

* இச்செய்யுள் சீறாப்புராணம் பாடிய மகாவித்வான் உமறு புலவரவர்களின் மரபோதயரும் இந்நூலாசிரியரின் மாணவருமான ஸ்ரீமத் பு.ல. இ. நல்ல முகம்மது களஞ்சியம் அவர்களாலியற்றப்பட்டது.

ஆமினுபாலா-அருள்-சேமமேமேலா
அற்புதமாமதுமூதே-விற்பனமாகிய தாதே
பொற்பதிபெறவேயுந்தம்-நற்கதிதருவீரந்தம் (பிறழ்)
சோமனேவகுத்தீர்-அதி-நேமமேபுகுத்தீர்
வாமகுஞ்சர நேமமிஞ்சிய- மதியேசிதியேதுதியுள்ளாய்
மந்திரம்படைத்தீர்-வெகு-சுந்திரமுடைத்தீர்
மான்மதவீசியதேகா மாமறியமணர்யோகா
தேன்மொழிபேசியதேவே-தீன்வழிநிற்பவர்கோவே (பிறழ்)
தேவரீர்வருவீர்-முந்தஞ்-சேவடி தருவீர்
பாவமும்பகை சாவதுந்தகை-பகலேமுகிலேயிகலிலா
பாக்கியநாதா-இறை-வாக்கியவேதா
பாதுபுரிந்திடவேது-ஈதில்கதிவேறேது
ஓதுகளஞ்சியமுய்யப்-பாதகனும்பிழைநைய (பிறழ்)

இமாமுன முகம்மதுப்னு, இத்ரீசுஸ்ஸாபிகி, றஹ்மதுல்லாகி
அலைகியென்ற, ஷாபிகி இமாம் அவர்கண்மீது

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.
பக்தியில்லாதமதியே யென்றமெட்டு.

பல்லவி.

ஞாயமில்லாதமதியே-நீநவில்வத-பாயமல்லவோகதியே

அநுபல்லவி.

மாயாப்பிரபஞ்ச-மயக்கமறவே துஞ்ச
மன்னுமுகம்மதிமாம் சொன்ன முறைபிறழ்ந்து
மஞ்சஞ்சணிகுழ-லுஞ்செஞ்சிலைமுத
லஞ்சஞ்சணவிழி-யுஞ்சஞ்சலமிகு
வருணிகிரணமலர்ச்-சரணஞ்சரணமெனரீ-ரீ-ரீ
வன மூங்கனமுமனு-தினமுந்தன மும்பெரு (ஞாய)

சரணங்கள்

காலமனேத்தும்பவமே-கைதேர்ந்துநீ-காண்பதென்னவோகவமே
ஆலோலிதஞ்சொல்லி-யவனியிலலைகிறாய்
அண்டம்புவனமுழு-தென்றும் புகழ்பரந்தோர்
அந்தந்திகழ்பவ-ருந்துந்தருகிக

ரிந்துந்தருகதிர்-நந்துந்திருமுகர்
அருளுங்கலைமுழுதுந்-தெருளுமுகம்மதிமாம்-ரீ-ரீ-ரீ
அபயமபயமென-வுபயபதமேதொழா (ஞாய)
காயமல்லவேசுகமே-நீகாண்பன-மாயமல்லவோமனமே
ஓயாப்பிரபந்த-வுவரிதனிலுழன்றாய்
உம்பரிம்பர்புகழு-மன்பரிமாம்ஷாபிகி
ஒன்றுந்திருமத-மென்றுந்திசைபல
மண்டும்பிரபல-ரின்றுன்றுயர்பல
வுதயபுவனமதி-யதுமுன்னிருள் புரைய-ரீ-ரீ-ரீ
ஓதங்கும் பதுங்குமவ-ரிதழும்பதழும்பெறு (ஞாய)
காலமுழுதுந்தெரிந்தோ-ரிமாமாலிக்கு-கருதவிளக்கம்புரிந்தோர்
சீலமிகுஞ்சுவனத்-திறவுகோலானவர்
செய்யித்முகம்மதுவின்-சென்னிதனிலிருத்தும்
செம்பொன்னடியின-ரென்பும்பரனென
அன்பின் மொழிபவர்-நம்பும்பரிவினர்
திகழுங்கவிபலரும்-புகழுமிஸுறதிபர்-ரீ-ரீ-ரீ
திறமுந்தரமுநல்ல-வரமுமுரமும்பெறு (ஞாய)

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

ஆசைமீறி யோடிவந்தேனே-என்றமெட்டு-

பல்லவி.

ஆசையாகி வாடிநொந்தேனே-அருள்குவாயடி செந்தேனே

அநுபல்லவி.

ஆசி-மன்னேசிசந்-தோசி விசுவாசி
ஆதாரம் வேறில்லடி-மலர்ப்-போதாரமே சொல்லடி (ஆசை)

சரணங்கள்.

பையல் வெம்பினேனே-பாதநம்பினேனே
பாடிமுன்-னோடிபண்-கோடி மலர்சூடி
பாக்யம் பெறலாமடி-மறை-வாக்யம்பெறநானடி (ஆசை)
கன்னல்மறைவாசர்-காரூன்மகிழ்நேசர்
கண்டுமுன்னின்றுகண்-கொண்டுதுயர்விண்டு
காணுமுகம்மதிமாம்-பதம்-பூண விருப்பசதமாம் (ஆசை)
என்று மறுகூலர்-இத்ரீசருள்பாலர்
ஏது இவ்-வாதுவெப்-போதும்சகியாது
ஏது முடியாதடி-யொரு-போதும்படியாதடி (ஆசை)

பாவமிஞ்சினேனே-மேவிக்கெஞ்சினேனே
பங்கம்பதுங்கும்ப்ர-சங்கம்பர துங்க
பாதாரமீதன்னமே-செல்ல-தீதேகுமேமுன்னமே (ஆசை)
புந்திமகிழ்ந்தேனே-வந்து-புகழ்ந்தேனே
பொய்யாத-செய்யாத-செய்யித்முகம்மது
போந்தேனவர்தம்பமே-இன்று-தீர்ந்தேன்பவத்துன்பமே ()

இராகம்-கமஸ்-தாளம்-ஆதி.

எப்போது-வந்தாளுவீர்-என்றமெட்டு

பல்லவி.

பொற்பாதந் தந்தாளுவீர்-புனிதவி-மாம்சாபிகீ (பொற்)

அநுபல்லவி.

பொற்பாரமல நாதா-புவனம்பரவும் போதா
புண்யரே-கண்யரே-புகழுமிமாம்ஷாபிகீ (பொற்)

சரணங்கள்.

சஞ்சலத்தினல்வாடி-யஞ்சலித்தேனேநாடி (சஞ்)
மிஞ்சும்பவமேதேடி-வெதும்பலானேனேயோடி
மெய்யரே-துய்யரே-விமலவிமாம்ஷாபிகீ (பொற்)
சூழ்பாவவிமோசனு-துய்யமிஸ்றாராசனு (சூழ்)
ஆழ்பாரவினைமரு-ளகிதமகலவருள்
ஆரணு-பூரணு-அபயவிமாம்சாபிகீ (பொற்)
காராருங்குடைமேலா-கருணையித்ரீசின்பாலா (காரா)
ஹாரூன்றசீதுமுன்னே-கருதும் ஜயஞ்சேர்மன்னே
கத்தரே-சுத்தரே-கனதியிமாம்ஷாபிகீ (பொற்)
சீராருமாமதியே-செப்புமுயர் பூபதியே (சீரா)
சிந்துபுகலும்மீது-செய்யிது முகம்மது
சீலரே-மேலரே ஜயமருளும்ஷாபிகீ (பொற்)

மன்னு இந்நேரம்-என்றமெட்டு.

பல்லவி

மன்னுவெந்நாளும்-முன்னேவந்தாளும்
மருவாருங்கமலப்பொன்-மலரடிதாரும் (மன்)

அநுபல்லவி.

தன்னேள்திருவருளார் தருவுருவான
தகமைமுகம்மது சாபிகிமாமே-சந்ததம் சதமாமே (மன்)

சரணங்கள்.

வாசகம்பீராமாமிஸ்ஹூாரா-மகிதலம் புகழ்மிகுமருவியசீரா
மாசில்லாவிதயத்துத்-தேசிகரான
மகிமைமுகம்மதுசாபிகிமாமே-மன்னருணிதமாமே (மன்)
ஏகமனூலாவித்ரீசின்பாலா-இகபரமிரண்டிலுமிகுமநுகூலா
மேகமிகலுங்கவி-வேந்தர்கண்மேலா
விமலமுகம்மதுசாபிகிமாமே-விண்ணவர்புகழாமே (மன்)
சிறியோர்செயும்பிழைச் சிறுமையநந்தம்
செறலின்றிப்பொறுப்பது-பெரியோர் தஞ்சொந்தம்
செய்யிது முகம்மது-செய்கவிக்குந்தம்
ஜயமருள்முகம்மதுசாபிகிமாமே-செயவருணிதயாமே (மன்)

சம்சீரபிறஹ்ன என்ற ஹிந்துஸ்தானி மெட்டு.

பல்லவி.

சம்சாரப்பிறக்கு நா-தாங்கமலப்பா
தாரந்தருவீரி மாம்சாபிகியே சம்

அநுபல்லவி.

அம்பூதலர்மீதலர் சேரும்சதா
பாதாரந்தரு வீரிமாம்சாபிகியே (பாதாரம்) (சம்)

சரணங்கள்.

பாங்கேதுகள் தேறேன்பாவசித்தம் மிகப்
பன்முறைமீறிப்பரந்துநித்தம் மன
மேங்குதியானே யெழுந்தபத்தம் எனக்
கிரங்குங்கருணையிமாம்சாபிகியே எனக்கி
ரங்குங்கருணை யிமாம்சாபிகியே (எனக்) (சம்)
பான்மறை வாருதிபருகிசதம் தரு
பண்புகொள் விண்புகழ்பரவுமதம் திரு
வான்மறிதிரை யுலகோருசிதம் பெற
வைகும்பருதி யிமாம்சாபிகியே பெற
வைகும்பருதி யிமாம்சாபிகியே (பெற) (சம்)
ஐயமலிந்தலைந்தே யருகிநயம் வந்து
அண்டினேனுஞ்சுதனென்றபயம் புகல்
செய்யிதுமுகம்மது சேரஜயம் தயை

செய்யுந்தகுதியிமாம் சாபிகியே தயை
செய்யுந்தகுதியிமாம் சாபிகியே (தயை) (சம்)

கௌதுல்அஃறலம், முகியித்தீன் அப்துல்காதிறில்
ஜைலானீறலியல்லாகு தஆலா அன்கு அவர்கண்மீது

இராகம்-பிலகிரி-தாளம்-சாப்பு.
சையாமேரிஜான் என்ற மெட்டு.
பல்லவி.

மையலாகினேன்-நாதா-மையலாகினேன்-ஒலியே
மையலாகினேன்-ஆகினேன்-வனசமலர்ப்பாதமீது (மைய)

அநுபல்லவி.

செய்யபுகழ்நாதரே-ஜம்மலப்துல்காதிறே
திகழும்போதரே-நாதா-திகழும்போதரே-ஒலியே
திகழும்போதரேபோதரே-சிறியேன்செய்தசிறுமைதீர (மைய)
பார்பரவுமீசரே-பன்னும்விசுவாசரே
பரமனேசரே-நாதா-பரமனேசரே-ஒலியே
பரமனேசரேநேசரே-பண்புவைத்தென்றன்னையாள (மைய)
ஆழும்வங்கமீட்டினீர்-அலகைதனையோட்டினீர்
அருளைக்காட்டினீர்-நாதா-அருளைக்காட்டினீர்-ஒலியே
அருளைக்காட்டினீர்காட்டினீர்-அநுதினமுமனதுவாடி (மைய)
சேருமுபகாரரே-சீர்பகுதாதூரரே
ஜயகம்பீரரே-நாதா-ஜயகம்பீரரே-ஒலியே
ஜயகம்பீரரேபீரரே-செய்யிதுமுகம்மதேழை (மைய)

இராகம்-உஷேனி-தாளம்-ஆதி.
நல்லபெண்ணைப் பாராய் தூதா என்றமெட்டு
பல்லவி.

பையலென்னைப்பாரீர்-நாதா-பையலென்னைப்பாரீர்

அநுபல்லவி.

மையுலாவுமிந்த வையகமீதே
மஃறூபுசுப்ஹானி யெனும்பிரசாதே (பைய)

சரணங்கள்.

வழுத்தும்வாய்மையறி யாதயான்மட்டி
மாதர்போகசுக மையலிற்கிட்டி

புழுத்தநாயினிழி புரையுறுமெட்டி
போதுசேர்கமலப் பாதத்திலொட்டி (பைய)
திருந்தும்வானவர்கள் சேர்குணமேரே
சீருலாவும்ஜெபி லான்தஸ்தகீரே
வருந்துமாதவர்கள் வாழ்த்திடும்சீரே
வாதிலாதவப்துல் காதிறென்பீரே (பைய)
காயமாவியொரு கைந்நொடிமூச்சு
கருதிவாழுமென்ப ததுவும்பொய்ப்பேச்சு
மாயமானஜக வாரியினீச்சு
மாறினுவெனது காரியமாச்சு (பைய)
வாருலாவுமொலி மார்புயமீது
மருவுமோர்கிரண வாரிசப்போது
நேரும்பாதமுளோர் நீள்புவிமீது
நீரல்லாதுமறு பேர்கிடையாது. (பைய)

ஏறுடிசுல்தான்செய்யிது, இபுருகீம்ஸகீதுவொலியுல்லா, அவர்கண் மீது (கண்டுமையலானேன்டா) என்ற மெட்டு.

பல்லவி.

கண்டுமகிழ்ந்தோதடி கமலப்பதம் (கண்டு)

அநுபல்லவி.

வண்டுநிகரால முண்டவிழியழகி (கண்டு)

சரணங்கள்.

வஞ்சக்குபிரவரி நெஞ்சக்கவரொழித்தே
மிஞ்சும்பயிர்விளைத்த விமலஸகீதொலியைக் (கண்டு)
ஆரணவாருதி அமரவர்க்காம்நிதி
காரணக்கடலெனுங் கருணைஸகீதொலியைக் (கண்டு)
அகிதவிமோசன ரமருஞ்சிம்மாசனர்
சுகிர்தகுணகா சுல்தான்ஸகீதொலியைக் (கண்டு)
பரதகண்டமுழுதும் பரவும்புகழ்விளைத்தோர்
விரதவிஸ்வாசரெனும் சரதஸகீதொலியைக் (கண்டு)
செய்யிதுமுகம்மது செந்தமிழ்க்கிரங்கிடும்
செய்யிதிப்ருகிமெனுஞ் சிறந்தஸகீதொலியைக் (கண்டு)

இராகம்-சமாஸ்-தாளம்-ரூபகம்.
வாடிவாடி மாதரசே யென்றமெட்டு.

கண்ணிகள்.

காரார்நபிகுல கம்பீரர்-கதியுதவிடவருமதிதீரர்
தீரர்-திருவுப-காரர்-திமிரர்வி-ரோதர்
விண்ணவர்-மன்-மன்-மன் (காரா)
பரனுரைநிதமற வாநேசர்-பரவைசூழேழு படிவாசர்
பாச-ரிறைவிசு-வாசர்பரவுப தேசர்
பாவலர்-பண்-பண்-பண் (காரா)
வரமருவியதிரு மறைநாதர்-வளர்பவவினையகல் தருநீதர்
வாகு-மிகுமிபு-ருகிமொலியுப-யோக
மாவருண்-மன்-மன்-மன் (காரா)
தினந்தினம்புனைமன வினையோட-செய்யிதுமுகம்மதி னிசை
[பாட
சேருந்-திருமுகம்-பாரும்ஜயந்தர-வாருந்
தேவரென்-முன்-முன்-முன் (காரா)

குதுபுல் அக்தாப்-சாகுல்ஹமீது ஆண்டவரவர்கண்மீது

பல்லவி.

ஆதாரம்வே றேதையா-அருளாதென்னவாதையா (ஆதா)

அநுபல்லவி.

ஆதவன் றருகதி-ரகலும்பெழில்வளைந்த
வேதமுழங்குநாகை-விளங்கும்ஹமீதொலியே (ஆதா)

சரணங்கள்

பாதா அரவிந்தமே பணிவோர்களின் சொந்தமே
தீதார்பவத்தொந்தமே சிறியேனெனக்கந்தமே
வாதுசெயுங்கொடிய-வல்வினையகற்றிய
மாதவமே-மதியே-நிதியே-யெனக் (காதா)
சீராகியவாரணு செப்புதிருக்காரணு
பேராருமுதாரணு பேசுமறையாரணு
தீரமிகுமடியோர்-தினமுமடிபரவும்
சீர்பதி-யேகதி-யேதுதியே-யெனக் (காதா)
சேருமுபகாரரே சீர்நாகையெனூரரே
யார்க்குங்கிருபாகரே அதிமாதவயோகரே

செப்புங்கவியு மது-செய்யி துமுகம்மது
சிந்தைவினையகல-வந்தனுதினமெனக் (காதா)

மாதிஹுற்றசூல் ஷெய்குசதக்கத்துல்லா சாகிபுவோலியுல்லா அவர்கண்மீது (வாவென்றழைக்கலாகாதா) என்றமெட்டு.

பல்லவி.

போய்வின்றழைக்கலாகாதா-பெண்ணே-கண்ணே (போய்)

அநுபல்லவி.

போதும்போதும்வாது தீதுபெருகுதின்னும் (போய்)

சரணங்கள்.

வேய்புரைதோளினய் விகசிததாளினய்
தேயுஞ்சிறுமருங்குல் சேடியோடித்-தேடியின்னும்(போய்)
ஆரணமேவினர் அமரரையேவினர்
சீரணிவாழ்நுதலாய் சிந்தைநொந்து-வந்தேனிதோ(போய்)
பாவவிமோசராம் பரமனினேசராம்
பக்திசதக்கொலியை புத்தி-முத்தி-சித்தி-பெற(போய்)
போய்வருவதுவல்லால் புகல்வதிலைநீநல்லாய்
புத்தியணுவுமில்லாய் சித்த-நித்த-நத்தி-யின்று(போய்)
வையகம்புகழ்சுலை மாஞெலிசுதனினர்
செய்யித்முகம்மதுவைச் சேரு-நீரு-வாரு-மென்று(போம்)

உன்னைநம்பினேன் சாமிஎன்றமெட்டு.

பல்லவி.

உம்மைநம்பினேன்-நாதா-வும்மைநம்பினேன்-ஒலியே

அநுபல்லவி.—சரணங்கள்.

சின்மயஞ்சிறந்தநாதா-திருமறைக்குருநீதா
இம்மையும்பரவும்போதா-வதென்மேல்வாதா (உம்மை)
கொந்தலர்புனேநேசரே-குணகரையின் வாசரே
செந்திருப்பிரகாசரே- ஜகதீசரே (உம்மை)
ஆரணம்புகழையரே-யமரர்பணிதுய்யரே
தாரணிபுகழ்மெய்யரே-தயைசெய்யவே (உம்மை)
பேரணிமகிழ்மயெல்லாம்-பிறங்குமொலியேவல்லாய்
சீரணிசதக்கதுல்லா-சிறந்தநல்லாய் (உம்மை)
மெய்யகம்பரவும்மீது-மேவியகவிதையோது
செய்யிதுமுகம்மது-ஜயஞ்சேரவே (உம்மை)

பிதாயதுல்கிதாயா,வெனும்நோ

ஆரம்பம்.

இது, சற்றேறக்குறைய 800வருஷங்களுக்கு முன்னிருந்த க
இமாம், அவர்களால் அறபிப்பாஷையிலியற்றப்பட்ட.

‘ பிதாயதுல் கிதாயாவின் மொழிபெயர்ப்பு ’

இந்தக்கிதாபு 3 பாகங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. முதலாவது வ
பாடுகளைப் பற்றியது. அதில் அல்லாகுத ஆலா அளவிற்சேர விரும்பு
வொருவரும் தமது விலைபெறப்பட்ட வாழ் நாள்களில் ஒரு நிமிஷமேனு
தாவிற் பழுதுபடா திருப்பதற்காக இராவுபகல் 24-மணி நேரங்களையும்
இன்னின்ன நேரங்களில் இன்னின்ன நற்காரியங்களை நடத்திவருக
மென்றதும், தொழுகை, நோன்பு முதலிய வழிப்பாடுகளுக்குரிய வி
களும், அவைகளுக்குத் துணைக்காரணமான வனேகவிஷையங்களும்
யிருக்கின்றன. 2-வது பாகம் பாவநிவர்த்தியைப் பற்றியது. அதி
காது, நாவு முதலிய வொவ்வொரு வுறுப்பும் இன்னின்ன வுபயோகத்
படைக்கப்பட்ட தென்பதும், அவைகளை யுபயோகிக்க வேண்டிய வொ
ளும், அவைகளைப் பேணவேண்டிய விதங்களும், வஞ்சகம், பொறுமை, த
மை, பிறர் தூஷணை முதலிய வனேக விஷையங்களின் விவரங்களும், அவ
நிவர்த்தி செய்யத்தக்க பரிகாரங்களும், சந்தர்ப்பத்திற்குத்தகுந்த விதமான
வனேக வுபதேச இரத்தினங்களும் அடங்கியிருக்கின்றன. 3-வது பாகம்
சினேக வொழுங்குகளைப்பற்றியது. இதில் அடிக்கடி சம்பவிக்கும் அனேக
விஷையங்களும் பிறருடைய சகவாசத்தின் பலனாக விளைந்து விடுவதால், இன்
னின்ன தன்மையுடைய வரைத்தான் சினேகஞ் செய்துகொள்ள வேண்டு
மென்றும், இன்னின்ன குணமுடையவரை சினேகஞ்செய்வதால் தீமையே
விளையுமென்றும், சினேகனிடத்திற் கவனிக்கவேண்டிய விஷையங்களும், நட
துகொள்ள வேண்டிய முறைகளும், அல்லாகுத ஆலாவிடத்தில் அடிமை நடந்து
கொள்ள வேண்டிய முறைகளும், தெளிவாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்
றன. கிதாபுமுழுவதிலும் ‘நாயம் அநீத்தியம்’ என்பதைப் பற்றிய கண்டி
பான வுபதேசங்களே மலிந்து விளங்குகின்றன. முதனூலுக்குத் தகுந்தாற்பே
லுள்ள மொழிபெயர்ப்பானது மிகவுந் தெளிவான செந்தமிழ் நடையில்
ரசம்பயப்பதாக வமைந்திருக்கிறது. இடைக்கிடையே வரும் வ... து
குச்சரியான அர்த்தங்களும், விளக்கக்குறிப்புக்களும் எழு

சுத்தத்தமிழ் கிளேஸ் கடிதம் புல்கவிகோ.

அறபுதமிழ் கிளேஸ் கடிதம் புல்கவிகோ.

ஷை ஷை தோல்பைண்டு

அறபுதமிழ் ரப்புக் கடிதம் புல்கவிகோ

குறிப்பு:— அறபுதமிழில் மௌலிதுல் ஹாகாயிது மு
பைத்துக்களும், கொழும்பு ஆலிம் சாகிபு அவர்கள்பேரி
ஜுமாவுடனும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

செ. மு. ஆலிம்புலவர் 205, அங்கப்பன் தெரு, செ

வித்ரியா தர்ஜுமாவும்,

பத்ஹுல்மஜீதும்

ஒரே கிதாபாக வெளிவந்து விட்டது விலை 6—0—0 இந்த மகிமை வாய்
வித்ரியாவானது, உலகமெங்கும் பிரபல்யமுள்ளது. நமது நாயக முகம்மது
லல்லாது அலைசிவஸல்லம் அவர்கண்மீது அறபிப்பாஷையில் ஸ்தோத்திர
க வியற்றப்பட்டது. மிகவுமுன்னதமானது. ஒவ்வொரு வீட்டிலும், வியாபா
லங்களிலும் வெள்ளி, திங்கட்கிழமைகளில் ஓதிவரப்படுகிறது. இது தர்ஜு
செய்யப்பட்டுத் தனிகிதாபாக அச்சிடப்பட்டு முன்பு ரூ. 5. கிரையம் ஏற்
ப்பட்டிருந்தது. ஈமான், இஸ்லா முதலிய எல்லாவிஷயங்களுமடங்கிய
ல்மஜீது. கிதாபும், முன்பு ரூ. 5. கிரையம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.
ண்டும் செலவாகிவிட்டமையாலும், இவ்விரண்டும் முஸ்லிமாகிய ஒவ்
வருக்கும் இகபரசாதனமாகவிருப்பதாலும் ஒரே கிதாபாக உயர்ந்த கடித
அச்சிடப்பட்டுக் கிரையம் ரூ. 10ல் மிகவும் குறைவாக ரூ. 6 ஏற்படுத்தப்
ருக்கிறது. சொந்த வுபயோகத்திற்குக்கட்டுவதுபோல் நேர்த்தியான
ல பைண்டுங் கட்டப்பட்டிருக்கிறது.

அஹ்ஸனுல் முனாஜாது.

இது, அலிபுமுதல், ஏ. வரையிலுமுள்ள 29-எழுத்துக்களையும் ஆரம்பமாக
வைத்து அல்லாதஆலா விடத்தில் வேண்டி நிற்றல் பொருளில் பாடப்பட்
டது. இதில் ஒவ்வொரு பாட்டிலும் ஸையிதுனாஇமாம் ஹஸன்ஹுஸைன் றலி
யல்லாது அன்ஹுமா அவர்களுடைய பெயரைவைத்தும், அவ்விருவரைக்கொண்டு
அல்லாதஆலாவிடத்தில் சிபாரிசுதேடியும், ஒவ்வொரு பாட்டினுடைய முடிபி
லும் அர்ஹமர்றாஹிமீன் என்று முடித்துமிருக்கிறது. இமாம்ஹஸன் ஹுஸைன்
றலியல்லாது அன்ஹுமா அவர்கள்பேரில் இயற்றப்பட்டவைகளில் இது ஒரு நூத
னமாகவும் உயர்ந்தபொருள்கள் ஒருங்கேயமையப்பட்டதாகவும் உள்ளது. அறபுத்
தமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 1.

அறிவிப்பு.

ரும், மற்றும், அறபுதமிழ் கிதாபுகள், தமிழ்ப்புத்தகங்கள்,
கீழ்க்காட்டப்படும் விலாசத்தாரிடம் ரொக்கமாகவும் வி. பி.
க்கொள்ளலாம். வி. பி. செலவு பிரத்தியேகம். மேல்விலாசம்
து தமிழில் பிழையற எழுதவேண்டும்.
ம்புலவர் அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

பதானந்தமாலிகை, கீர்த்தனமாலிகை முதலியவைகள் கு. மு.
சன், குருணாக்கல், சிலோன். இந்த விலாசத்தாரிடமும் கிடைக்கும்.

CO., MADRAS. THE "KAPALEE" PRESS.